# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் 15.07.2026**

**முன்னிலை**

## முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப (ஓய்வு)
## மாநில தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். CP 2513/SCIC/2024**

திரு D. சந்தானம் — புகார்தாரர்

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
செயற்பொறியாளர், ....... பொதுஅதிகார அமைப்பு
மண்டலம் - 8,
பெருநகர சென்னை மாநகராட்சி,
எண்.36, பி, புல்லா அவென்யூ,
செனாய்நகர், சென்னை 600 014

**ஆணை**

| | | |
|---|---|---|
| 1. | மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு | 29.03.2024 |
| 2. | மனுதாரரின் மனுவினை சட்டப்பிரிவு 6(3)ன் கீழ் மாற்றம் செய்த நாள் | 02.04.2024 |
| 3. | மனுதாரரின் புகார் மனு | 20.05.2024 |

மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் / துணை ஆட்சியர் (நிர்வாகம்), பெருநகர சென்னை மாநகராட்சி, செனாய் நகர், சென்னை என்ற முகவரிக்கு சட்டப்பிரிவு 6(1)-ன் கீழ் 29.03.2024 தேதியிட்டு அனுப்பிய மனுவில், 05.05.2023 தேதியிட்டு முதலமைச்சரின் தனிப்பிரிவிற்கு அனுப்பிய தனது புகார் மனுவானது 11.06.2023 அன்று பெருநகர சென்னை மாநகராட்சிக்கு மாற்றம் செய்யப்பட்டதாகவும், அம்மனுவின் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்த விவரங்களை வழங்குமாறு கோரியுள்ளார்.

2. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில் திருமதி அ. சித்ராதேவி, பொதுத் தகவல் அலுவலர் / செயற்பொறியாளர் (பொ), பெருநகர சென்னை மாநகராட்சி, செனாய் நகர், சென்னை ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

3. மனுதாரர் முதலமைச்சர் தனிப்பிரிவிற்கு அனுப்பிய மனுவின் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்த விவரங்களை 29.03.2024 தேதியிட்ட சட்டப்பிரிவு 6(1)ன் கீழ் தாக்கல் செய்த மனுவில் கோரியுள்ளார். மனுதாரரின் சட்டப்பிரிவு 6(1)ன் கீழான மனுவானது சட்டப்பிரிவு 6(3)ன் கீழ் 02.04.2024 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர் / செயற்பொறியாளர், மண்டலம் -8, பெருநகர சென்னை மாநகராட்சி, செனாய்நகர், சென்னை என்ற முகவரிக்கு மாற்றம் செய்யப்பட்டு, அதன் விவரம் மனுதாரருக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் பொதுத் தகவல் அலுவலரால் மனுதாரருக்கு எந்தவித தகவல்களும் வழங்கப்படவில்லை. எனவே, மனுதாரர் தனது சட்டப்பிரிவு 6(1)ன் கீழான மனுவிற்கு எந்தவித தகவல்களும் வழங்காத பொதுத் தகவல் அலுவலர் மீது நடவடிக்கை மேற்கொள்ளுமாறு விசாரணையின்போது ஆணையத்தின் முன் கோரினார். **அதனடிப்படையில் 02.04.2024 அன்று மனுதாரரின் மனுவினைப் பெற்றபோது பொதுத் தகவல் அலுவலர் பொறுப்பிலிருந்த திரு ட. பத்மநாபன், தற்போது மண்டல அலுவலர், மண்டலம் 3, பெருநகர சென்னை மாநராட்சி, மாதவரம், சென்னை என்பவர் மனுதாரரின் மனுவிற்கு எந்தவித தகவல்களும் வழங்காத காரணத்திற்காக அவர் மீது சட்டப்பிரிவுகள் 20(1) மற்றும் 20(2)ன் கீழ் ஏன் நடவடிக்கை மேற்கொள்ளக்கூடாது என்பதற்கான அவரது விளக்கத்தினை தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் மேற்படி அலுவலரிடமிருந்து பெற்று 07.08.2026 அன்று ஆணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்படுகிறது.**

4. மேலும், மனுதாரர் தனது மனுவில் கோரிய தகவல்கள் தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வருவதாக பொதுத் தகவல் அலுவலர் விசாரணையின்போது தெரிவித்தார். ஆனால் அதுதொடர்பான தகவல்களை அவர் விசாரணையின்போது சமர்ப்பிக்கவில்லை. இருப்பினும், முந்தைய பொதுத் தகவல் அலுவலர் ஆணையத்திற்கு சமர்ப்பிக்கும் தனது காரணம் கேட்பு குறிப்பாணைக்கான விளக்கத்தில் மேற்குறிப்பிட்ட நீதிமன்ற வழக்கு குறித்த விவரங்களை குறிப்பிடலாம் என்பதை ஆணையம் பொதுத் தகவல் அலுவலருக்கு எடுத்துரைக்கிறது.

**ஒம்/-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 2513/SCIC/2024</u>**

**பெறுநர்**

**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்/
செயற்பொறியாளர்,
மண்டலம் - 8,
பெருநகர சென்னை மாநகராட்சி,
எண்.36, பி, புல்லா அவென்யூ,
செனாய்நகர், சென்னை 600 014

திரு T. பத்மநாபன்,
மண்டல அலுவலர்,
மண்டலம் - 3,
பெருநகர சென்னை மாநகராட்சி,
மாதவரம், சென்னை 600 060 **(முன்னாள் பொதுத் தகவல் அலுவலர், மண்டலம் - 8, பெருநகர சென்னை மாநகராட்சி, செனாய் நகர், சென்னை)**

**மனுதாரர்**

திரு D. சந்தானம்,
த/பெ R. தாமோதரன்,
எண்.24, பிளாட் B2,
மகாலெட்சுமி அடுக்குமாடி குடியிருப்பு,
காந்திரோடு, சூளைமேடு,
சென்னை 600 094

**நகல்**

ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை 600 003

பதிவாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
சென்னை 600 035

TK/PS